ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
ජාතික ඇගයීම් හා පරීක්ෂණ සේවාව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
**Department of Examinations, Sri Lanka**
NATIONAL EVALUATION AND TESTING SERVICE

පැලවත්ත, බත්තරමුල්ල.
பெலவத்தை, பத்தரமுல்ல
Pelawatta, Battaramulla.

මගේ අංකය / எனது இல / My No: 6/5/பெறுபேறு/2023
ඔබේ අංකය / உமது இல / Your No: ..............................
දිනය / திகதி / Date: 2023.11.16

දුරකථන / தொலைபேசி / Telephones: 2786200, 2784201, 2785202, 2784203, 2784204, 2786205, 2784206,
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 011-2785220
තැපැල් ලිපිනය / அஞ்சல் முகவரி / POSTAL ADDRESS: තැ.පෙ. 1503, කොළඹ / த.பெ. 1503 கொழும்பு / P.O.Box 1503 Colombo
අන්තර්ජාල ලිපිනය / இணையதள முகவரி / Internet Address: www.doenets.lk
E-mail : exmd@sltnet.lk

அதிபர்களுக்கு,

**பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்காக நடத்தப்பட்ட பரீட்சை – 2023**
**பெறுபேறுகள் வெளியிடுதல்**

பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயநர்பெயர் (username), கடவுச்சொல் (password) என்பவற்றைப் பயன்படுத்தி உங்கள் பாடசாலையின் பெறுபேற்று ஆவணத்தை பதிவிறக்கம் செய்து அச்சுப்பிரதி செய்து கொள்வதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். இப் பெறுபேறுகளின் அச்சுப்பிரதியொன்றை குறித்த பரீட்சார்த்திகள் அறிந்து கொள்வதற்காக அறிவித்தற் பலகையில் காட்சிப்படுத்தவும். பரீட்சார்த்திகளின் பெறுபேற்றுச் சான்றிதழ்கள் மீள் பரிசீலனையின் பின்னர் உங்களுக்கு தபாலில் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் சான்றிதழ்கள் உரிய பரீட்சார்த்திகளுக்கு உடனடியாக கிடைக்கச் செய்வது கட்டாயமாகும்.

**பெறுபேற்று அட்டவணையின் அச்சுப்பிரதி பாடசாலைகளுக்கு மீள வழங்கப்படமாட்டாதாகையால் தரவிறக்கம் செய்யப்பட்ட பெறுபேற்று ஆவணத்தை பாடசாலையில் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பதையும் கவனத்திற் கொள்ளவும்.**

02. பிரபல பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யவும் உதவிப்பணம் வழங்குவதற்கும் அவ்வவ் மாவட்டங்களுக்குரிய வெட்டுப்புள்ளி மட்டம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி தகுதி பெற்ற பரீட்சார்த்தியின் பெயருக்கு எதிரே **'QUALIFIED'** எனவும், தகுதிபெறாத பரீட்சார்த்தியின் பெயருக்கு எதிரே மூன்று கோடுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதற்கும் மேலதிகமாக உதவிப்பணம் பெறுவதற்குத் தகுதிபெற்ற பரீட்சார்த்திகளின் பெயருக்கு எதிரேயுள்ள வருமான நிரலில் **'BELOW'** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறான பரீட்சார்த்திகளுக்கு மட்டும் உதவிப்பணம் பெறுவதற்கு உரிய படிவத்தைப் பூர்த்திசெய்து (B படிவம்) வலயக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. பிரபல பாடசாலையொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக மாவட்டத்தின் வெட்டுப்புள்ளி மட்டம் அல்லது அதற்கும் மேலதிக புள்ளிகள் பெற்றுக்கொண்ட **'QUALIFIED'** எனக் குறிப்பிடப்பட்ட பரீட்சார்த்திகள் மட்டுமே விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்விண்ணப்பப்படிவங்கள் குறித்த மாணவன்/மாணவி கல்வி கற்கும் பாடசாலை அமைந்துள்ள வலயத்தின் பணிப்பாளரினூடாக பத்தரமுல்ல, 'இசுருபாய', கல்வி அமைச்சின் பாடசாலை நடவடிக்கை கிளைக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

04. **அமைச்சரவை/19/2354/127/064 இலக்கமும் 2019.09.11 ஆம் திகதியுமுடைய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி விசேட தேவைகளையுடைய 250 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் ஒதுக்கப்பட்டுள்ளதுடன்.** அம்மாணவர்களைத் தெரிவு செய்யும்போது பின்வரும் செயன்முறை பின்பற்றப்பட்டுள்ளது.

i) விசேட தேவையுடையவர்களாய் இருந்தாலும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகள் மாவட்ட மட்ட குறைந்தபட்ச வெட்டுப்புள்ளி அல்லது அதற்குக் கூடிய புள்ளியைப் பெற்றிருப்பின் சாதாரண முறையின்கீழ் புலமைப்பரிசில் உதவிப்பணம் பெறுவதற்கும் பிரபல பாடசாலையொன்றுக்கு விண்ணப்பிப்பதற்கும் உரித்துடையவர்கள் ஆவர்.

ii) விசேட தேவையுடைய, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகள் குறித்த மாவட்ட வெட்டுப்புள்ளியைவிடக் குறைவான புள்ளிகளைப் பெற்றிருப்பின் புலமைப்பரிசில் உதவிப்பணம் பெறுவதற்கு மட்டும் உரித்துடையவர்கள். அவ்வாறான பிள்ளைகளின் பெயருக்கு எதிரே 'QUALIFIED – SPECIAL NEEDS' எனக் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் மட்டும் உதவிப்பணம் பெறுவதற்கு உரித்துடையவராவர்.

iii) விசேட தேவைகள் உடைய, கூடிய வருமானம் பெறும் குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகள் பெற்ற புள்ளிகள் உரிய மாவட்ட வெட்டுப்புள்ளியைவிட கூடுதலாக அல்லது குறைவாக இருப்பின் பெயருக்கு எதிரே 'QUALIFIED – SPECIAL NEEDS' எனக் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் உதவிப்பணம் பெறுவதற்கு உரித்துடையவர்கள். எனினும் அவர்களுள் உரிய மாவட்ட வெட்டுப்புள்ளியையோ அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளையோ பெற்றிருப்பின் மட்டுமே பிரபல பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

இப்பரீட்சைப் பெறுபேற்றை வெளியிடுவதற்கு முன்னர் நுணுக்கமாக பல தடவைகள் பரிசீலிக்கப்பட்டு பெறுபேறுகளின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் எவரேனும் ஒரு மாணவனின்/மாணவியின் பெறுபேறு தொடர்பில் திருப்தியில்லை எனில் கீழே தரப்பட்டுள்ள படிமுறைகளைப் பின்பற்றி இப் பரீட்சை தொடர்பாக 2023.11.27 ஆம் திகதி முதல் 2023.12.04 ஆம் திகதி வரை நிகழ்நிலை முறைமை (Online System) ஊடாக மேன்முறையீடு செய்து கொள்ளல் வேண்டும்.

1. School Account இற்குள் பிரவேசிப்பதற்காக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பயநர் பெயர் (User Name), கடவுச்சொல்லைப் (Password) பயன்படுத்தவும்.
2. மேன்முறையீட்டிற்கான பரீட்சைச் சுட்டெண்ணை உள்ளடக்கும் போது திரையில் காட்டப்படும் பெயர் மற்றும் புள்ளிகள் என்பவை குறித்த சுட்டெண்ணுக்கு உரியனவா? என சரிபார்த்து அதனை உறுதிப்படுத்துக.
3. ஏனைய விண்ணப்பதாரிகளின் மேன்முறையீடுகளையும் அவ்வாறே உள்ளடக்கவும்.
4. மேன்முறையீட்டுக்காக விண்ணப்பதாரிகள் சகலரதும் தகவல்களை உள்ளடக்கிய சுருக்கமான அறிக்கையை தரவிறக்கம் (Downlod) செய்யவும்.
5. அதன் வன்பிரதியுடன் (Hard Copy) ஒவ்வொரு மாணவனினதும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை இணைத்து இலங்கை பரீட்சைத் திணைக்களம், த.பெ.இ 1503, கொழும்பு எனும் முகவரிக்கு 2023 டிசம்பர் 04 ஆம் திகதிக்கு முன்னர் அதிபர் ஊடாக முன்வைக்கவும்.

- ❖ ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் அடைவு தொடர்பில் தனித்தனியாக தயாரிக்கப்பட்ட வகுப்பாசிரியரின் விதப்புரை
- ❖ ஒவ்வொரு விண்ணப்பதாரியும் வெளிப்படுத்தியுள்ள விசேட திறன்கள் மற்றும் திறமைகள் தொடர்பாக தனித்தனியான அறிக்கை.

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை – 2023**
**மேன்முறையீடு மீதான விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்தல்**

பாடசாலையின் பெயர் : ................................................ தொலைபேசி இல. ....................................

| தொடர் இலக்கம் | பரீட்சை சுட்டெண் | மாணவன் /மாணவியின் பெயர் | பெற்றுக் கொண்ட புள்ளிகள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

அதிபரின் பெயர் : ..........................................................................................................

திகதி : ............................................... கையொப்பம் : ...................................................

(பதவி முத்திரை பதிக்கவும்)

06. மாவட்ட வெட்டுப்புள்ளி

| வெட்டு புள்ளி மட்டம் | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் |
| 01. | கொழும்பு | 154 | 147 |
| 02. | கம்பஹா | 154 | 147 |
| 03. | களுத்துறை | 154 | 147 |
| 04. | கண்டி | 154 | 147 |
| 05. | மாத்தளை | 154 | 147 |
| 06. | நுவரெலியா | 146 | 144 |
| 07. | காலி | 154 | 147 |
| 08. | மாத்தறை | 154 | 147 |
| 09. | அம்பாந்தோட்டை | 150 | 143 |
| 10. | யாழ்ப்பாணம் | - | 145 |
| 11. | கிளிநொச்சி | - | 144 |
| 12. | மன்னார் | 145 | 143 |
| 13. | வவுனியா | 145 | 145 |
| 14. | முல்லைத்தீவு | 145 | 145 |
| 15. | மட்டக்களப்பு | - | 145 |
| 16. | அம்பாறை | 148 | 145 |
| 17. | திருகோணமலை | 146 | 144 |
| 18. | குருநாகல் | 154 | 147 |
| 19. | புத்தளம் | 148 | 143 |
| 20. | அநுராதபுரம் | 148 | 143 |
| 21. | பொலன்னறுவை | 149 | 143 |
| 22. | பதுளை | 149 | 144 |
| 23. | மொனறாகலை | 149 | 143 |
| 24. | இரத்தினபுரி | 150 | 144 |
| 25. | கேகாலை | 154 | 147 |

எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர
பரீட்சை ஆணையாளர் நாயகம்

H.J.M.C. Amith Jayasundara
Commissioner General of Examinations
Department of Examinations.
Pelawatta, Battaramulla
Sri Lanka

பிரதிகள்:
1. செயலாளர், கல்வி அமைச்சு - அறிந்து கொள்வதற்காக
2. கல்விப் பணிப்பாளர், பாடசாலை நடவடிக்கைகள் கிளை, கல்வி அமைச்சு - உரிய நடவடிக்கைகளுக்காக
3. மாகாண கல்வி அமைச்சு - த.அ.கொ
4. வலயக் கல்வி அமைச்சு - த.அ.கொ